**பொல்பிதிகம பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 07 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தம்பர் 07 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பொல்பிதிகம பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலையான சொத்துக்கள் கணக்கின் மீதியுடன் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கிற்கு சமமாக இருக்க வேண்டிய போதிலும், இக்கணக்கு இரண்டிற்கிடையே ரூபா 77,892,792 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 5,902,898 பெறுமதியான நீர் சுத்திகரிப்பு அலகுகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் சாலியகம வாரச்சந்தயின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய வேண்டிய கணக்குகள்**

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 41,146,177 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 23,856,176 பெறுமதியான நிர்மாணக் கடன்பட்டோர் மீதிகளுக்குரிய காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வருமானக் கடன்பட்டோரிடமிருந்து ரூபா 30,000 தொகை 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மீதிகளுடன் கூடியதாக இருந்தன.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 33,683,156 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 27,654,320 பெறுமதியான நிர்மாண மற்றும் பொது வழங்கல்

கடன்கொடுத்தோர் மீதிகளுக்குரிய காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது.

(ii) திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்களிலிருந்து ரூபா 945,981 தொகை 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மீதிகளுடன் கூடியதாக இருந்தன.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 13,705,836 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 387,498 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 13,318,339 ஆன அதிகரிப்பு ஒன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 26,602,846 ஆன மூலதன உதவி மற்றும் ரூபா 31,903,811 ஆன மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 8,404,871 வரை மிகையாக மாறியுள்ளது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | வருமானம் 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | செலவினம் 2015 | 2014 | முரண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் | 17,961 | 8,433 | 9,528 | தனிப்பட்ட வேதனம் | 37,164 | 28,787 | 8,377 |
| (ii) | ஏனையவை | 41,551 | 32,665 | 8,886 | ஏனையவை | 8,643 | 11,924 | (3,281) |
| | உப மொத்தம் | 59,512 | 41,098 | 18,414 | உப மொத்தம் | 45,807 | 40,711 | 5,096 |
| (iii) | மூலதன வருமானம் | 26,603 | 117,517 | (90,914) | மூலதன செலவினம் | 31,903 | 102,234 | (70,331) |
| | மொத்தம் | 86,115 | 158,615 | (72,500) | மொத்தம் | 77,710 | 142,945 | (65,235) |
| | செயற்பாட்டு விளைவு | 13,705 | 387 | 13,318 | மிகை / பற்றாக்குறை | 8,404 | 15,670 | (7,266) |

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 59,512,457 ஆக இருந்ததுடன், அதில் 69.8 சதவீதமான ரூபா 41,551,366 தொகை சபையினால்

உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளுடன் கூடியது. அவ்வாறே மூலதன வருமானமாகிய ரூபா 26,602,846 ஆன மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு கிடைக்கப்பெற்ற பணத்தினை கொண்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவினம் ரூபா 45,806,621 தொகையில் 81 சதவீதமான ரூபா 37,163,677 தொகை தனிப்பட்ட சம்பளங்களுக்கான செலவினங்களாகக் காணப்பட்டதுடன் அவற்றில் மொத்தமாக 86 சதவீதமான அதாவது ரூபா 32,074,958 ஆன சம்பள மீளளிப்பாக உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதி ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே மூலதன செலவினமான ரூபா 31,903,811 தொகையில் 3.2 சதவீதம் அதாவது ரூபா 1,036,727 தொகை சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தததுடன் மீதியான 96.8 சதவீதமான ரூபா 30,867,084 ஆன அளவு கமநெகும, மகநெகும ஆகிய மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்கள் அடங்கியுள்ளது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015 மதிப்பிடப் பட்டது | 2015 உள்ளவாறான | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குறை | 2014 மதிப்பிடப் பட்டது | 2014 உள்ளவா றான | 2014 திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குறை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) வீதவரியும் வரியும் | 644 | 966 | - | 211 | 386 | - |
| (ii) குத்தகை வாடகை | 5,667 | 5,394 | 24 | 3,980 | 3,882 | - |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,396 | 1,875 | - | 1,265 | 1,571 | - |
| (iv) ஏனைய வருமானம் | 44,937 | 51,277 | 16,644 | 38,118 | 35,258 | 8,193 |
| மொத்தம் | 52,644 | 59,512 | 16,668 | 43,574 | 41,097 | 8,193 |

### 2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | வருமான சேகரிப்பு | | | நிலுவை மீதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | 2015/12/01 இல் நிலுவை |
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரி மற்றும் வரி | - | 966 | 966 | - | 966 | 966 | - | - | - |
| வாடகை | - | 5,418 | 5,418 | - | 5,394 | 5,394 | - | 24 | 24 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | - | 1,875 | 1,875 | - | 1,875 | 1,875 | - | - | - |
| ஏனைய வருமானம் | 8,193 | 59,728 | 67,921 | 8,191 | 43,086 | 51,277 | 2 | 16,642 | 16,644 |
| | 8,193 | 67,987 | 76,180 | 8,191 | 51,321 | 59,512 | 2 | 16,666 | 16,668 |

குத்தகை வாடகையின் கீழ் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 5,667,302 ஆன வருமானம் பட்டியலிடப்பட்டு காணப்பட்ட போதிலும், ரூபா 5,394,567 அதாவது 95.18 மாத்திரமாக இருந்தது.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 7,652,500 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 8,260,300 தொகையுமாகும்.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஓய்வூதிய திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,037,928 தொகை 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் செலுத்த வேண்டிய மீதிகளாக இருந்ததுடன் அதனை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஆம் ஆண்டு மதல் 2014 ஆம் ஆண்டு வரை 01 ஆண்டு மதல் 06 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 1,018,911 ஆன 16 வைப்பு மீதிகள் 2016 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செயற்பாடற்ற கணக்கொன்றாக காணப்பட்ட நிரந்தர பராமரிப்பு கணக்கில் ரூபா 1,585,098 ஆன செலவு மீதியொன்று காணப்பட்டது.

(ஆ) சபை அலுவலகத்திற்காக ரூபா 482,000 செலவிடப்பட்டு 10 மேசைகளும், 10 அலுவலக கதிரைகளும், 10 பைபர் அலுமாரிகளும் 2 தட்டு அலுமாரிகளும் கொள்வனவு செய்தமை தொடர்பான கோவையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இக்கொள்வனவிற்காக பத்திரிகை அறிவித்தல் மூலம் அல்லது பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து விலைகோரல் மேற்கொள்ளாமல் நேரடியாக ச.ண.ச சங்கத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**3.3 பசுக்கள் கொள்வனவும் பகிர்ந்தளித்தலும்**

பாதீட்டு முன்மொழிவு - 2013 மாகாணத்தில் வறுமையை குறைக்கும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைத்த ரூபா 1,440,0000 ஆன மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஏற்பாடுகள் மற்றும் ரூபா 360,000 நலனாலிகளின் பங்களிப்பு என்பவற்றின் அடிப்படையில் 18 பசுக்கள் கொள்வனவு செய்து வழங்கப்பட்டிருந்ததுடன், உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் ஆலோசனை கடிதத்தின் பின்னிணைப்பு இலக்கம் 02 இன் 01 ஆம் பிரிவின் பிரகாரம் பசு ஒன்றுக்காக 20 சதவீதம் நலனாளிகளின் பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட பசுவொன்றின் பெறுமதி ரூபா 90,000 இற்கும் ரூபா 120,000 இற்கும் இடைப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு நலனாலியிடமிருந்தும் ரூபா 20,000 வீதம் அறவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. சில தனியார் உரிமையாளர்களிடமிருந்து பசுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், குறித்த வழங்குனர் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை எதுவென கணக்காய்விற்கு தகவல் சமர்ப்பிக்கப்படவில்லை. பசுக்கள் வழங்கப்பட்டிருந்த நலனாலிகள் மற்றும் சபைக்கு இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் அந்த உடன்படிக்கையில் உரிய நலனாலிகளுக்கு வழங்கப்பட்ட பசுவை இனங்காண்பது தொடர்பில் எவ்வித தகவல்களும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) பொருட் பதிவேட்டின் 43 ஆம் பக்கத்தில் 119 பிளாஸ்ரிக் கதிரைகள் மீதி காணப்பட்ட போதிலும் 2016 சனவரி 29 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது 35 கதிரைகள் பற்றாக்குறையாக இருந்தன.

(ஆ) 2015 யூலை 15 ஆந் திகதி நிர்மாண களஞ்சிய கணக்கு பேரேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்த ரூபா 103,447 பெறுமதியான 3387 அச்சுக் கற்கள் காணாமல் போயிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2014 மாகாண எழுச்சி ரூபா 6,000,000 நிதிஏற்பாட்டின் பேரில் 20 பெட்டிக் கடைகளை நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 17 ஆம் திகதி மீண்டும் 8'-6' பெட்டி கடைக்காக ரூபா 198,142 மற்றும் 8'-12' பெட்டிக் கடைக்காக ரூபா 306,016 ஆன மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தன. தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் 2014 ஆகஸ்ட் 01 மற்றும் திசெம்பர் 17 ஆந் திகதிகளில் கூறுவிலை கோரப்பட்டிருந்தன. ஆரம்ப மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்ட 2014 செப்தம்பர் 24 ஆந் திகதி பொல்பிதிகம பிரதேசத்தில் 3 நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் பின்னர் திகதி இல்லாமல் மேலும் 03 நிறுவனங்களிலிருந்து கூறுவிலை பெற்றுக்கொள்ளப்பட்டு ஆரம்பத்தில் பெற்ற கூறுவிலைகள் தொடர்பாக எவ்வித செயற்பாடுகளையும் மேற்கொள்ளளாது திகதி இல்லாத பின்னர் பெற்றுக்கொண்ட 03 கூறுவிலைகள் மாத்திரம் பொதுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை விபரங்களின் பிரகாரம் 8'-6' பெட்டி கடைக்காக ரூபா 168,000 ஆன குறைந்த விலையான டனரா பேல்டின் வேர்க்கஸ் இடமிருந்து முன்வைக்கப்பட்டிருந்த போதிலும் அவ்விலை விபரங்கள் கருத்திற்கொள்ளப்படாமல் 8'-6' அளவிலான ஒரு கடைக்காக ரூபா 198,000 வீதம் 9

கடைகளுக்கு குறித்த வேலைக்காக கவிஷ அயன் வேர்க்" இற்கு வழங்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ஒரு பெட்டிக் கடைக்காக ரூபா 30,000 படி 09 பெட்டிக் கடைகளுக்கு ரூபா 270,000 தொகை கூடுதலாகச் செலுத்தியிருந்தது. மேலும் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 8-9-3 ஆம் பிரிவுகளின் பிரகாரம் முறையான ஒப்பந்த உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

## 3.6 ஒப்பந்த நிர்வாகம்

### 3.6.1 பொல்பித்திகம பொது விளையாட்டரங்கின் பொது மலசலகூட நிர்மாணம்

(அ) ரூபா 1,980,120 ஆன மதிப்பீட்டின் பேரில் சபையினால் நேரடி நிர்மாணமொன்றாக பொல்பித்திகம பொது விளையாட்டரங்கின் பொது மலசலகூடம் 2014 மாகாண எழுச்சி ரூபா 2,000,000 நிதிஏற்பாடுகளின் பேரில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி இந்நிர்மாணத்திற்காக பெற்றுக்கொண்ட பொருட்களுக்காக ரூபா 1,200,000 நிறுவனமொன்றுக்கு செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாணத்திற்காக பெற்றுக்கொண்ட பொருட்களுக்குரிய பட்டியலொன்றோ களஞ்சிய பெறுவனவுப் பத்திரமொன்றோ சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. சபையினால் நேரடி நிர்மாணமொன்றாக இந்நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், கோவையின் பிரகாரம் நிர்மாணத்திற்காக ரூபா 1,752,398 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2016 பெப்ரவரி 05 ஆந் திகதி வரையிலும் உழைப்பிற்காக எவ்வித பணமும் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் 2014 நவம்பர் 26 ஆந் திகதியுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மூலம் ரூபா 1,973,113 ஆன வேலை நிறைவு அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்ததுடன், 2015 மே 02 ஆந் திகதி மேற்கொண்ட நிலையப் பரிசோதனையின் போது ரூபா 62,164 பெறுமதியான உப பாகங்கள் பொருத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.6.2. அலுவலகத்தின் மேல் மாடியின் எஞ்சிய பகுதியை பூர்த்தி செய்தல்

ரூபா 4,500,000 மதிப்பீட்டின் கீழ் பொது சபை நிதியத்தினைக் கொண்டு அலுவலகத்தின் மேல் மாடியின் எஞ்சிய பகுதியை பூர்த்தி செய்யும் போது பத்திரிகை மூலம் விலை விபரங்கள் கோரப்பட்ட ஒப்பந்த முறைமையில் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தத்தை வழங்குவதற்கன செயற்பாடு தொடர்பாக கணக்காய்வின் போது சிக்கலானதான்றாக இருந்ததுடன் ஒவ்வொரு செயற்பாடும் மேற்கொள்ளப்பட்ட திகதிகள் ஒன்றுக்கொன்று முரணாக இருந்தது. மேலும் நிறுத்தி வைத்தல் தொகையாக ரூபா 143,813 தொகை நிறுத்திவைக்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் ரூபா 88,813 மாத்திரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்நிர்மாணம் 3 மாதங்களில் பூர்த்தி செய்வதற்காக 2015 மே 02 ஆந் திகதி குறித்த ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2016 பெப்ரவரி 05 ஆந் திகதி வரையிலும் உடன்படிக்கை காலம் முடிவடைந்து 06 மாதங்கள் கடந்திருந்த போதிலும், குறித்த நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. தாமதமாகும் காலத்திற்குரிய தாமதக் கட்டணங்கள் அறவிடுவது தொடர்பாக ஏற்பாடுகள் உடன்படிக்கையில் குறிப்பிடப்படாதிருந்ததுடன், உரிய நிர்மாணத்தை நிறைவேற்றுவது தாமதமானமை தொடர்பில் சபையால் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 4.1.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையினால் 2011 ஆகஸ்ட் 22 ஆந் திகதி ரூபா 61,600 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த கைவிரலடையால இயந்திரம் 2014 நவம்பர் மாதம் முதல் முதல் 2016 பெப்ரவரி மாதம் வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் ரூபா 280,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 02 அச்சுக்கல் இயந்திரங்கள் 2014, 2015 ஆம் ஆண்டுகளில் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அவ்வருடங்கில் அச்சுக்கல் வெளிநிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான 04 சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

## 05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்